# தரங்கம்பாடித் தங்கப் புதையல்

செந்தமிழ்ச் செல்வர்

ம. ப. பெரியசாமித் தூரன்

வானதி பதிப்பகம்
தி.நகர் · சென்னை·17

## உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

✸✸✸

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

## Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

✸✸✸

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

முதற்பதிப்பு : நவம்பர், 1981
குழந்தைகள் தின வெளியீடு.

திருநாவுக்கரசு தயாரிப்பு

விலை : ரூ. 2-50

மாருதி பிரஸ், 173, பீட்டர்ஸ் ரோடு, சென்னை-600 014.

# பதிப்புரை

செந்தமிழ்ச் செல்வர் உயர்திரு. பெ. தூரன் அவர்கள் குழந்தைகளுக்கு நல்ல நல்ல பாட்டுகளும் சுவையான கதைகளும் சொல்பவர், எழுதுபவர். அவருடைய கதைகளில் சிறுவர் சிறுமியருக்குச் சிந்தனையூட்டக்கூடிய சிறந்த கருத்துகள் இருக்கும். சிரிப்பூட்டும் சீரிய விஷயங்கள் இருக்கும். வாழைப்பழத்தில் செந்தூர மருந்து வைத்துக் கொடுப்பதுபோல், திரு. தூரன் அவர்கள் கதை வடிவில் அரிய பெரிய கருத்துகளை அற்புதமாகப் புகட்ட வல்லவர். புகழ்மிக்க குழந்தை எழுத்தாளர். செந்தமிழ்ப் பேரறிஞர். அவரிடமிருந்து இப்பொழுது தமிழ் நாட்டுக் குழந்தைகளுக்குத் 'தரங்கம்பாடித் தங்கப் புதையல்' என்ற தமிழ்ப்புதையல் கிடைத்துள்ளது. நல்ல விறுவிறுப்பான கதை. படிக்கப்படிக்கச் சுவை தரக்கூடிய கதை.

படித்துப் பயனடையுங்கள். இந்நூலைக் குழந்தைகள் தினத்தில் வெளியிடும் பாக்கியத்தையளித்த இறையருளைப் போற்றுகிறேன். இதனை வெளியிட அனுமதியளித்த செந்தமிழ்ச் செல்வர் திரு. தூரன் அவர்களைப் பாராட்டு கிறேன்.

அன்பன்

ஏ. திருநாவுக்கரசு

# முன்னுரை

சுமார் 12 வயது முதற்கொண்டு 16 வயது வரையுள்ள இளைஞர்களுக்குத் துணிச்சல் மிகுந்த கதைகளில் (Adventure Stories) மிகுந்த ஆர்வம் உண்டு. அவற்றை அவர்கள் ஆர்வமாகப் படிப்பார்கள். இந்தக் கதைகள் சொல்வதில் இரண்டு வழிகள் உண்டு. குறிப்பிட்ட சில பாத்திரங்களைக் கொண்டு அவற்றின் இயல்புக்கு மாறுமல் எழுதுவது ஒருவகை. கொல்லி மலைக்குள்ளன், சங்ககிரிக் கோட்டையின் மர்மம், தரங்கம்பாடித் தங்கப்புதையல் ஆகிய துணிச்சல் மிகுந்த கதைகளில் இதே முறைதான் கையாளப் பட்டுள்ளது. சுமார் 12 வயதுள்ள தங்கமணி என்ற சிறுவன் கூரிய அறிவு உடையவன். பத்து வயதுள்ள சுந்தரமே ஒரு தமாஷ் பேர்வழி. 9 வயதுடைய கண்ணகி பயந்த சுபாவம் உடையவள். இந்த மூவரையும் வைத்துக் கொண்டுதான் மேலே குறிப்பிட்ட மூன்று நூல்களும் எழுதப் பட்டுள்ளன. ஜின்கா என்ற குரங்கு தங்கமணியினுல் நன்கு பயிற்சி கொடுக்கப்பட்டிருப்பதால் அது

இடை இடையே புகுந்து ஆச்சரியமான பல சாகசங் களைப் புரிகின்றது. பல தடவைகளில் உயிரைக் காப் பாற்றவும் முன்வந்துள்ளது. இந்த ஜின்கா குரங்கினால் சிறுவர்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. மொத்தமாக நான்கு பேர்களும் சேர்ந்து, உள்ளத்தைக் கவரும் வகையில் நடந்துகொள் வதை நீங்கள் காணலாம். பொதுவாகச் சிறுவர், சிறுமிகளுக்கு ஒரு சிறந்த விருந்து நடப்பதை நீங்கள் அனுபவிக்கலாம். இன்னும் அதிகம் எழுதப்போனால் உங்களுக்குப் பிடிக்காது. ஆகையால், கதைக்குள் நேராக நுழையுங்கள். பிறகு உங்களுக்குப் பிடிக்கிறதா என்று தெரிவியுங்கள்.

—பெ. தூரன்

# தரங்கம்பாடித் தங்கப் புதையல்

"ஆஹா கண்ணகி...நீதான் சமையலா? அப்போ...... இன்றைக்கு......அரைப்பட்டினிதான்" என்று இழுத்துக்கொண்டே வீட்டிற்குள் நுழைந்தான் சுந்தரம். அவன் கேலிசெய்ய ஒரு நல்ல சந்தர்ப்பம் வாய்த்தது.

"அப்போ என்னவாம்? இந்த ஒரு மாசமா நான் தான் இங்கே சமையல். பீம பாகம், நள பாகம் எல்லாம் தோற்றுப்போகும் என்று அம்மாவே சர்டிபிகேட் கொடுத்திருக்கிறுர்கள்" என்று உற்சாகமாகக் கூறினுள் கண்ணகி.

"அப்போ மறுநாளே மதுரைக்கு இங்கிருந்து புறப்பட வேண்டியதுதான். இந்த பீம பாகம் எல்லாம் நமக்குக் கட்டிவராது. பேசாமல் உடனே புறப்பட்டாக வேண்டும். வேறு வழியில்லை

த.—1

வயிற்றை என்னால் சோதனைச்சாலையாக மாற்ற முடியாது."

"என்னடா, இப்பொழுதுதான் மதுரையிலிருந்து வந்திருக்கிறாய். உடனே புறப்படவேண்டும் என்கிறாயே!" என்று சிரித்துக்கொண்டே அவனுடைய மாமன் வடிவேலு கேட்டார். வடிவேலு சென்னை பச்சையப்பன் கல்லூரியில் ஒரு வரலாற்றுப் பேராசிரியர். அவருக்கும் கோடை விடுமுறை.

"ஆமாம், உடனே மதுரைக்குத் திரும்பிப் போகவேண்டும், மாமா. இந்த பீம பாகம் எல்லாம் எனக்குச் சரிப்பட்டு வராது."

"அப்பா, இந்தக் கோமாளி பீம பாகத்துக்கும் நள பாகத்துக்கும் வித்தியாசம் தெரியாமலே பேசறான். நான் நள பாகத்தில்தான் தேர்ச்சி பெற்றிருக்கிறேன். சாப்பிட்டுப் பார்த்தால் பிறகு விடவே மாட்டான்."

"என்ன வித்தியாசமாம்?" என்று கேட்டான் சுந்தரம்.

"பீமன் பெருங்கூட்டத்திற்குச் சமைப்பதிலே கெட்டிக்காரன். நளன் நான்கு ஐந்து பேர் கொண்ட அளவான குடும்பத்திற்குச் சமைப்பதிலே

தேர்ச்சி பெற்றவன்" என்று தனது புலமையைப் பெருமையோடு கூறினாள் கண்ணகி.

"இன்னும் ஆம பாகம், ஊம பாகம், ஓம பாகம் என்று நீ கேள்விப்பட்டதுண்டா?"

"என்னடா, அரிச்சுவடியைத் தப்பாக ஒப்பிக்கிறாய். மதுரை, தமிழ்ச் சங்கத்திற்குப் பேர். போனதாயிற்றே! இன்னும் அ, இ, உ என்றெல்லாம் வரிசையாக வருமே" என்று நகைத்தாள் கண்ணகி.

இவர்கள் சளைக்காமல் போட்டி போட்டுக் கொண்டு பேசுவதை மிகவும் ரசித்துக்கொண்டே வந்தாள் கண்ணகியின் தாயார் வள்ளிநாயகி.

சுந்தரத்திற்கு வயது பதினொன்று இருக்கும். பேராசிரியர் வடிவேலுவின் தங்கையின் மகன். அவன் மதுரையில் ஓர் உயர்நிலைப் பள்ளியில் படித்து வருகிறான். ஒவ்வோர் ஆண்டிலும் கோடை விடுமுறையின்போது சென்னை வருவதை வழக்கமாக வைத்துக்கொண்டிருக்கிறான். கண்ணகியைக் கேலி செய்வதிலேயும் பொதுவாக நகைச்சுவையோடு பேசுவதிலும் வல்லவன். சுந்தரம் இருக்குமிடத்தில் எப்பொழுதும் கேலியும் சிரிப்பும்தான்.

கண்ணகிக்குச் சுமார் பத்து வயது இருக்கும். என்றாலும் சமையல் செய்வதில் மிகவும் ஆர்வம்

காட்டுவதுண்டு. சில உணவு வகைகள் நன்ருகவும் செய்யக்கூடிய திறமை வாய்ந்தவள்.

"இந்தத் தடவை தரங்கம்பாடிக்குப் போகப் போகிருேம். கோடை விடுமுறை அங்குதான்" என்ருர் வடிவேலு.

உடனே உற்சாகம் பிறந்துவிட்டது சுந்தரத் திற்கு. "மாமா, தரங்கம்பாடி எங்கே இருக்கிறது? அங்கே பார்க்கவேண்டியவை என்ன இருக்கின்றன? ஜின்காவிற்கு வேலே கிடைக்குமா?" என்று கேள்வி மேல் கேள்விகளை அடுக்கிக்கொண்டே போனுன் சுந்தரம்.

"தரங்கம்பாடிக்கா போகப் போகிருேம்? பேரைக் கேட்டாலே நன்ருக இருக்கிறது. தரங்கம் பாடிக்கும் எதற்கு இந்தத் தடவை போகத் தீர்மானித்திருக்கிறீர்கள்? அப்பொழுது தரங்கம் பாடிக்குப் போனுல் சமையல் எல்லாம் வேண்டி யிருக்காது. நான் கற்றுக்கொண்டதெல்லாம் வீண்தானு?" என்று அவளும் கேள்விக்கு மேல் கேள்விகளை அடுக்கினுள் கண்ணகி.

"அப்பா...எனக்கே மூச்சு வாங்குகிறது. நீ கேள்விக் கணைகளைத் தொடுத்துவிட்டால் வில்லுக்குப் பேர்போன அர்ஜுனனே தோற்றுப்போவான்" என்ருன் சுந்தரம்.

"இத்தனை கேள்விகளை ஒரேயடியாகக் குவித்தால் எப்படிப் பதில் சொல்வதென்று எனக்கே புரியவில்லை. ஆகவே, ஒவ்வொன்ருகப் பதில் சொல்லுகிறேன்" என்று சிரித்துக்கொண்டே கூறினர் வடிவேலு.

"மாமா, ஒரே வார்த்தையில் பதில் சொல்லுங்கள். இதில் தேர்ச்சி பெற்றுவிட்டால் உங்களுக்கு நூறு மார்க்" என்ருன் சுந்தரம். மாமாவிடத்தில் சுந்தரத்திற்குப் பிரியம் அதிகம். அவருக்குந்தான் சுந்தரத்திடம் மிகுந்த பிரியம். அதனுல் தாராளமாக இப்படிப் பேசிக்கொள்வார்கள். அவர்கள் மனம் விட்டுப் பேசாத பேச்சே இல்லை எனலாம்.

"அத்தைக்குச் சில மாதங்களாக உடம்பு சரியில்லை என்பது உனக்குத் தெரியும். தரங்கம்பாடி சோழ மண்டலக் கரையில் உள்ளது. தரங்கம் என்ருலே அலைகள் என்று அர்த்தம். அங்கே ஓஸோன் நிரம்பிய காற்று சதா வீசிக்கொண்டேயிருக்கும். உடல் நலத்திற்கு மிகவும் ஏற்றது. அதனுலே அங்கே போகப்போகிருேம்."

"அப்பா, தரங்கம்படிக்குப் போனுல் எதற்காகச் சமையல் செய்து பழகிக்கொள்ளவேண்டும்?" என்று சந்தேகத்தோடு கேட்டாள் கண்ணகி.

"உனக்கு எப்போதும் சந்தேகம்தான். சமையலும் தெரிந்துகொள்ள வேண்டியதுதானே? அது பீம பாகமாக இருக்குமோ, நளபாகமாக

இருக்குமோ என்பதுதான் எனக்குக் கவலை'' என்று நகைத்தான் சுந்தரம்.

''நீதான் சாப்பாட்டு ராமன் ஆயிற்றே. எப்பொழுதும் வயிற்றைப்பற்றிய கவலைதான். அப்பா, எனது கேள்விக்குப் பதில் கிடைக்கவில்லையே!'' என்று அப்பாவை நோக்கிக் கேட்டாள் கண்ணகி.

''தரங்கம்பாடியில் நல்ல உணவுக்கு வேண்டிய ஹோட்டல்கள் இல்லை. சுத்தமாகவும் இருக்காது. அதனுல்தான் சமையல் கற்றுக்கொண்டால் நல்லது'' என்று விளக்கினுர் வடிவேலு.

இவற்றையெல்லாம் பொறுமையோடும் மகிழ்ச்சி யோடும் கேட்டுக்கொண்டிருந்தாள் வடிவேலுவின் மனைவி வள்ளிநாயகி. பலநாள் உடல்நலம் இல்லாமை யால் அவள் மிகவும் பலஹீனமாகக் காணப்பட்டாள். உடம்பில் நல்ல ரத்தமில்லாமையால் முகம் வெளுத் திருந்தது. இது ஒருவகை ரத்தச் சோகை என்பார்கள்.

தனக்குப் பிடித்தமான நண்பன் சுந்தரம் வந்து விட்டதை அறிந்து ஓடோடியும் வந்தான் தங்கமணி. சுந்தரத்தின் நகைச்சுவையைக் கேட்டுப் பல மாதங் கள் ஆயிற்று என்பதை உணர்த்த ஜிங்ஜிங்கென்று ஜின்கா குதித்துக்கொண்டே தனது அன்பான வரவேற்பை வெளிப்படுத்தியது அது. ஜின்கா என்பது ஒரு குரங்கின் பெயர். அது ஜிங்ஜிங் என்று

அடிக்கடி குதிப்பதால் ஜின்கா என்று. பெயர் வைத்தார்கள்.

ஜின்கா என்ற குரங்கை மிகவும் அன்போடு வளர்த்து வந்ததோடு, அதற்குப் பல பயிற்சிகளையும் கற்றுத்தந்திருக்கிறன் தங்கமணி.

"தரங்கம்பாடியில் டச்சுக்காரர் கட்டிய கோட்டை ஒன்று உள்ளது என்று நான் படித்திருக்கிறேன்" என்று ஆரம்பித்தான் தங்கமணி.

"சரி, ஆரம்பித்துவிட்டாயா? உனக்கு அங்கே நிறைய வேலையிருக்கும். நவீன ஷெர்லக் ஹோம்ஸ் ஆயிற்றே" என்று நகைத்தான் சுந்தரம்.

சுந்தரத்தின் பேச்சைக் கவனியாத வடிவேலு, "தங்கமணி, நீ சொல்வது உண்மைதான். ஆனல் வியாபாரத்தின் பொருட்டாகப் போட்டி போட்டுக் கொண்டு டேனிஷ்காரர்கள் அங்கு கோட்டை ஒன்று கடலோரத்தில் கட்டினர்கள். ஆங்கிலேயரின் சூழ்ச்சியால் இந்தப் போட்டி வெற்றி பெறவில்லை. தரங்கம்பாடிக் கோட்டையையும் அவர்கள் விட்டுப்போக நேர்ந்தது. டச்சுக்காரர்கள் கொஞ்சம் கை சோர்ந்த போது தரங்கம்பாடிக் கோட்டையை 12½ லட்சம் ரூபாய்க்கு பிரிட்டிஷார் வாங்கிக்கொண்டனர். சுதந்திரம் பெற்ற இந்தியாவில் இப்பொழுது அது இந்திய அரசங்கத்தாரால் முஸாபரி பங்களாவாக

உபயோகப்படுத்தப் படுகிறது" என்று விளக்கினார். அவர் வரலாற்றுப் பேராசிரியர் அல்லவா?

அடுத்த நாள் தரங்கம்பாடிக்குச் செல்லவேண்டிய முன்னேற்பாடுகள் எல்லாம் 'தடபுடலாக' நடந்தேறின. எல்லாம் ஒரே உற்சாகம். அவசரம் அவசரமாக நடந்தேறின. சிறுவர்களுக்கு மகிழ்ச்சி தாங்கமுடியவில்லை. அப்படி ஓடோடி வேலை செய் தார்கள்.

ஆனால், அதைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல் தனக்குப் புதிதாகத் தன் தந்தையார் வடிவேலு அவர்கள் பரிசாக அளித்த உலோகக் கண்டுபிடிப்பான் (Metal Detector) என்ற நூதனமான கருவி சரியாக வேலை செய்கிறதா என்ற ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந் தான், தங்கமணி. பலவகையான உலோகங்களை ஓரிடத்தில் ஒளித்துவைத்து அவற்றைக் கண்டு பிடிப்பது எப்படி, அந்தக் கருவி சரியாக வேலை செய் கிறதா என்பன போன்ற ஆராய்ச்சியிலே முழுக் கவனம் செலுத்தினான். கடைசியில் அந்தக் கருவி சரி யாகவேவேலை செய்கின்றது என்று கண்டபிறகுதான் பெரிதும் திருப்தியும் பெற்றான். உலோகத்தை எங்கு மறைத்து வைத்தாலும், எத்தனை ஆழத்தில் மறைத்து வைத்தாலும் இந்தக் கருவியைக்கொண்டு கண்டு பிடித்துவிடலாம்.

சுந்தரத்திற்கு பைனாக்குலர் என்ற தொலை நோக்கி ஆடி பரிசாகக் கிடைத்தது. அவனிட

மிருந்து அதை வாங்கி ஜின்கா தோளில் மாட்டிக் கொண்டு அடிக்கடி அதன் வழியாக உற்றுப் பார்த்துக் ஆச்சரியப்பட்டுக்கொண்டே நின்றது. அதுவே ஒரு வேடிக்கையாக இருந்தது. அது தானும் ஒரு துப்பறியும் நிபுணன் போலப் பாசாங்கு செய்வதைப் பார்த்து மூன்று பேரும் கைதட்டிச் சிரித்தார்கள். ஜின்கா, அவர்கள் சிரிப்பதைக் கண்டு, காரணமில்லாமல் ஜிங்ஜிங்கென்று குதிக்கலாயிற்று. மூவரும் மீண்டும் கொல்லென்று கைதட்டிச் சிரித்தார்கள். வடிவேலுவும் வள்ளிநாயகியும் இந்தச் சிரிப்பில் கலந்துகொண்டார்கள்.

# தரங்கம்பாடிக்கு பஸ்ஸில் பயணம்

சரியாக பஸ் நிலையத்திற்குக் காலை எட்டு மணிக்கே சென்றுவிட்டார்கள். பஸ் புறப்படுவதற்கு இன்னும் அரை மணி நேரம் இருந்தாலும் தங்க மணிக்கோ சுந்தரத்திற்கோ கண்ணகிக்கோ இருப்புக் கொள்ளவில்லை. அவர்கள் அவசரத்தைப் பார்த்து வடிவேலுவும் தம் மனைவியுடன் முன்னதாகவே புறப் பட்டார்.

அப்படி முன்னதாகப் புறப்பட்டதும் நல்லதாகப் போயிற்று. ஏனென்றால் ஜின்காவை ஏற்றிக்கொள்ளு வதற்கு முதலில் ஆட்சேபம் தெரிவித்தார் கண்டக்டர். "குரங்குபுத்தி'—அது மற்ற பிரயாணிகளை என்ன செய்யுமோ? அந்தப் பொறுப்பு நமக்குவேண்டாம். குரங்கு பேனைப் பார்த்தாலும் பார்க்கும், தலையைக் கடித்தாலும் கடிக்கும்" என்று ஆட்சேபனை செய்தார் கண்டக்டர்,

“அந்தக் குரங்கு இல்லாவிட்டால் இந்தக் குரங்கும் வராதே, என்ன செய்வது?” என்று தங்க மணியைப் பார்த்து நகைத்தான் சுந்தரம்.

“அப்பா, பயணத்தை வேண்டுமானால் ரத்து செய்துவிடலாம்” என்று தங்கமணி சொல்லி முடிப் பதற்குள், “அண்ணனும் வர மாட்டான் நானும் வரப்போவதில்லை” என்றாள் கண்ணகி. “அப்பொழுது நானும் வரப்போவதில்லை” என்று கூறினான் சுந்தரம். இவ்வாறு ஒரேயடியாக மூவரும் ஒருமனதாகத் தங்கள் நிலைமையைத் தெளிவாக எடுத்துரைத்தார்கள்.

ஆனால் வடிவேலு, ஜின்காவைத் தங்கமணி எப்படிப் பழக்கப்படுத்தியிருக்கிறான் என்பதையும், அது லபவீரச் செயல்கள் புரிந்திருப்பதையும், ஜின்கா வினால் மற்றைய பயணிகளுக்குத் தீங்கு விளையாது என்றும் தெளிவாக எடுத்துரைத்தார். கடைசியில், ஓட்டுநரோடு கலந்து நீண்டநேரம் உரையாடிய பின்பு கண்டக்டர் அரைமனதாக அதை ஏற்றுக்கொள்ள ஒப்புக்கொண்டார்.

“வழியில் ஏதாவது குரங்கு சேஷ்டை செய் தால் உடனே அதை இறக்கி விட்டுவிடுவேன்” என்ற எச்சரிக்கையோடும் என்ன நேருமோ என்று கலவரத் தோடும் கண்டக்டர் ஒப்புக்கொண்டார். எடுத்த எடுப்பிலேயே இந்தப் பயணம் ரத்தாகிவிடுமோ என்ற எழுந்த பயம் ஒருவாறு நீங்கியது.

ஆனுல், ஜின்கா பஸ் பிரயாணத்தின்போது மிகவும் சமர்த்தாக நடந்துகொண்டதும் அல்லாமல் பஸ் பயணிகள் அனைவரையும் தனது வேடிக்கைகளால் ஒருங்கே கவர்ந்துவிட்டது.

ஜின்காவிற்கு ரயில் பயணம் புதிதல்ல; ஆனுல் பஸ் பயணம் புதிய அனுபவம். பஸ்ஸும் எக்ஸ்பிரஸ் பஸ். ஆகையால், அது மிகவும் அழகாகவும் புதியதாக வும் இருந்தது. பஸ்ஸில் ஒரு குழந்தை என்ன காரணத் திஞலோ 'வீர்வீர்' என்று அழத் தொடங்கியது. அதன் தாயார் எவ்வளவு சமாதானப்படுத்தியும் அழுகை நிற்கவில்லை. இது மற்றவர்களுக்குப் பெருந் தொல்லையாக இருந்தது.

உடனே ஜின்கா மெதுவாக அங்கே சென்று, அக் குழந்தையின் முன்னுல் தன் ஆட்டத்தை காண்பிக்கவே, குழந்தை அழுகையை நிறுத்திவிட்டுச் சிரிக்கத் தொடங்கிற்று. பஸ்ஸிலிருந்த மற்ற பயணிகள் எல்லோரும் சிரித்தார்கள்.

ஜின்கா மிகவும் செல்லமாக இருப்பதையும் அதனுல் யாதொரு தீங்கும் விளையாது என்பதையும் அறிந்துகொண்டன குழந்தைகள். அதனுல் ஜின்கா வின் அருகில் தான்தான் உட்காருவேன் என்று ஒவ்வொரு குழந்தையும் போட்டி போட்டுக்கொண் டிருந்தது.

ஜின்கா அவர்களையெல்லாம் திருப்திசெய்யும் அளவிற்கு மிகவும் சாதுரியமாக நடந்துகொண்டது.

இப்படியாக ஜின்கா சுருண்டு தாவுவதும், பஸ் முழுவதும் சுற்றிச் சுற்றி வேடிக்கை காட்டுவதுமாக இருந்தது. தாயார் வள்ளிநாயகியைக் கண்டவுடன் அவள் பாதங்களில் விழுந்து வணங்குவதைப் பார்த்து எல்லோரும் ஆச்சரியப்பட்டனர்.

சுந்தரத்திற்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கோர் எல்லையே இல்லை. தரங்கம்பாடிச்சாலையில் இருபக்கங்களிலும் என்ன இருக்கிறது என்பதைக்கூடக் கவனியாமல் அவன் ஜின்கா செய்யும் வேடிக்கைகளிலே ஈடுபட்டிருந்தான். தங்கமணி மட்டும் சாலையில் இருமருங்கிலும் என்ன இருக்கின்றது என்பதைக் கூர்ந்து கவனித்துக்கொண்டிருந்தான். கண்ணகி கொஞ்ச நேரம் ஜின்காவின் விளையாட்டைக் கவனித்துவிட்டு, ஒரேயடியாகத் தூங்கிவிட்டாள். தரங்கம்பாடிக்கு வருகின்றதே தெரியாமல் இவ்வாறு இனிது முடிந்துவிட்டது பஸ் பயணம்.

"கும்பகர்ணி, எழுந்திரு" என்று கண்ணகியைக் கேலி செய்தான் சுந்தரம். இராமாயணத்தில் வருவது ஒரு கும்பகர்ணன். சுந்தரம், கும்பகர்ணி என்று அதைப் பெண்பாலாக்கிவிட்டான்!

கண்ணகி திடுக்கிட்டு விழித்தெழுந்தாள். பஸ் நிலையத்தில் ஒரு பெரிய கூட்டமே கூடிவிட்டது. ஜின்காவிற்கு 'டாட்டா' சொல்ல எல்லோரும் ஆவலாக இருந்தனர். பக்கத்தில் ஒரு பூக்கடை

இருந்தது. அதனுல் ஒருவர் ஒரு மாலேயே வாங்கிப் போட்டுவிட்டார்! அந்த அளவிற்கு ஜின்கா அனே வரையும் கவர்ந்துவிட்டது.

நேராகத் தரங்கம்பாடிக் கோட்டையை அடைந் தனர். அப்பொழுது இருள் சூழ்ந்துகொண்டிருந்த சமயம். வள்ளிநாயகிக்கு வசதியாக இருக்கும் பொருட்டு ஒரு தனி அறையை ஏற்பாடு செய்திருந் தார்கள். மற்ற யாவரும் ஒரு பெரிய அறையில் தங்கினுர்கள். இவ்வளவிற்கும் ஏற்பாடு செய்திருந் தார் வடிவேலு நண்பரான தரங்கம்பாடி சப்இன்ஸ் பெக்டர் திரு. முத்துசாமி. அவரும் பஸ் நிலையத் திற்கு வந்து தமது கல்லூரி நண்பரான வடிவேலுவை அன்புடன் வரவேற்ருர்.

இதையெல்லாம் கூர்ந்து கவனித்துக்கொண் டிருந்த ஜின்கா, வருகின்றவர் மிக முக்கியமானவர் என்பதை உணர்ந்து, ஜிங்ஜிங்கென்று குதித்து அவரிடம் சென்று, ஒரு போலீஸ் ஜவானேப்போல ஒரு சலாமே செய்தது.

முத்துசாமி ஜின்காவை அன்புடன் தட்டிக் கொடுத்தார்.

"ஒரு மாத காலம் தங்கி நன்ருக ஓய்வு எடுத்தால் இந்தத் தரங்கம்பாடியில் வீசும் ஓஸோன் காற்றே ரத்தச் சோகையை எல்லாம் போக்கிவிடும். தைரியமாக இருங்கள்" என்று வள்ளிநாயகியைப்

பார்த்துப் பரிவோடு கூறினர் முத்துசாமி. மற்றவர்களிடம் சிறிது நேரம் உரையாடிவிட்டு அவர் சென்று விட்டார்.

"இந்த ஊரில் என்னவெல்லாம் விசேஷம்?" என்று கேட்டாள் தங்கமணி.

"சரி, ஆரம்பித்து விட்டாயா உன் ஆராய்ச்சியை?" என்முன் சுந்தரம்.

"அண்ணனுக்கு ஆராய்ச்சி; இந்தச் சாப்பாடு ராமனுக்குச் சாப்பாடு" என்முள் கண்ணகி.

எல்லாரும் லகலவென்று சிரித்தார்கள். இப்படியாக முதல் நாள் பயணம் இனிது முடிவு பெற்றது.

## தரங்கம்பாடிக் கோட்டை

தரங்கம்பாடிக் கோட்டை கி. பி. 1620இல் கட்டப்பட்டது. காப்டன் ரேலண்ட் கிரேப் என்ற டச்சுக்காரரும் டேனிஷ் கப்பல் படைத்தலைவன் ஒவ் கெட்டியுமாகச் சேர்ந்து ஒரு நிலப்பகுதியை ரூ. 3111 வருட வாடகைக்குப் பெற்றுக்கொண்டனர். இருவருமாக இந்த இடத்தை டேனிஷ் குடியேற்ற ஸ்தலமாக்கினர். முதன் முதலாகக் கட்டப்பட்ட உள் கோட்டையான டேன்ஸ்பர்க் கட்டடச் சுவரில் உள்ள வெள்ளைச் சலவைக்கல் சாஸனத்தில் கட்டிய தேதியையும் கட்டியவர் பெயரையும் இன்றும் பார்க்கலாம்.

தங்கமணி தரங்கம்பாடிக் கோட்டையை ஆராய்ச்சி செய்வதற்கு உடனே ஜின்காவுடன் புறப்பட்டுவிட்டான். ஆராய்ச்சியில் அத்தனை ஆர்வம் அவனுக்கு.

“சுந்தரம், நீ பிறகு வரலாம். நான் முதலில் செல்லவேண்டும்” என்று அவசரமாகக் கிளம்பினான் தங்கமணி.

“ஆமாம், கோட்டை என்றால் நீ நிற்பாயா? சங்ககிரிக் கோட்டையின் மர்மத்தை வெற்றிகரமாக முடித்த உடனே இந்தக் கோட்டை கிடைத்திருக்கிறது. இந்தக் கோட்டையில் என்ன மர்மம் அடங்கியிருக்கிறதோ, பார்க்கலாம். அதுவும் புதையலாக இருக்குமோ!” என்று கேட்டான் சுந்தரம்.

சுந்தரம் இவ்வாறு கேட்டதைக்கூடக் கவனியாமல் உடனே கிளம்பிவிட்டான் தங்கமணி. ஜின்கா அவனுடன் கிளம்பிற்று என்று சொல்லத் தேவையில்லை.

தரங்கம்பாடிக் கோட்டை மிக உறுதியாகக் கட்டப்பட்டுள்ளது. சில இடங்களில் நான்கடி, ஐந்தடி கனமான சுவர்களால் என்றும் அழியாதவாறு கட்டப்பட்டுள்ளதை அறிந்து தங்கமணி ஆச்சரியம் அடைந்தான். உலோகக் கண்டு பிடிப்பானைத் தங்கமணி நன்கு பயன்படுத்தினான். எங்கும் உலோகம் இருப்பதாக அது அறிவித்தது. இது அவனுக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தந்தது. இந்தச் சமயத்தில் பைனாக்குலரை கழுத்தில் ஒய்யாரமாக மாட்டிக்கொண்டு சுந்தரம் அங்கு வந்து சேர்ந்தான்.

"டேய், நமக்கு நிறைய வேலையிருக்கிறது என்று உலோகக் கண்டுபிடிப்பான் சொல்லுகிறது. அந்த உலோகம் எங்கிருக்கிறது, எப்படிக் கண்டுபிடிப்பது என்பதைத்தான் ஆராய்ச்சி செய்யவேண்டும்" என்றான் தங்கமணி.

"வந்ததும் ஆரம்பித்துவிட்டாயா? ஒரு நாள் பொறுத்து அத்தையினுடைய செளகரியத்தையெல்லாம் கவனித்துக்கொண்டு, பிறகு தொடங்காலமே?" என்றான் சுந்தரம்.

"அதையெல்லாம் சப் இன்ஸ்பெக்டர் கவனித்துக் கொள்வார். அவர் நமக்குக் கிடைத்த நல்ல நண்பர். நமக்கும் நிறைய வேலையிருக்கிறது என்று தோன்றுகிறது. வீண் காலதாமதப்பட்டுப் பயனில்லை" என்றான் தங்கமணி.

"சரி, நீ பிடித்தால் ஜின்கா பிடிதானே? இதில் நீ எந்த வகையில் என் உதவியை எதிர்பார்க்கிறாய்?" என்று கேட்டான் சுந்தரம்.

தங்கமணி முதலில் ராஜ வீதி, ராணி வீதி, தளகர்த்தர் வீதி எல்லாம் ஆராய்ந்துவிட்டு, "உப்பனாறு என்ற குறுகிய ஆற்றைப் பார்க்க வேண்டும். அதில்தான் டேனிஷ் பிரபு மரியம்மை கோயிலுக்குத் தினமும் படகில் ஏறி வருவாராம். அதை ஆராய வேண்டும்" என்று ஆழ்ந்த யோசனையோடு கூறினான் தங்கமணி. அங்குள்ள வீதிகளின்

பெயரையும் ஆற்றின் பெயரையும் மனப்பாடம் செய்துவிட்டான் தங்கமணி.

"எப்படியடா இதற்குள் எல்லாம் ஆராய்ச்சி செய்துவிட்டாய்? எனக்கு ஒன்றும் விளங்கவேயில்லையே!" என்று ஆச்சரியத்தோடு கேட்டான் சுந்தரம். ராஜ வீதி, ராணி வீதி, தளகர்த்தர் வீதி, என்ற பழைய வீதிகளின் பெயரையும் உப்பனாறு என்ற ஆற்றின் பெயரையும் சுந்தரம் இதுவரையில் கேட்டதில்லை.

"இதற்கென்ன ஆராய்ச்சி வேண்டியிருக்கிறது. சிலவற்றைப் படித்துத் தெரிந்துகொண்டேன். படித்துத் தெரிந்துகொள்ள முடியாதவற்றை நேரில் பார்த்துத்தான் ஆராயவேண்டும்" என்றான் தங்கமணி.

"நீ முதலில் கடப்பாரையைக் கொண்டு தோண்டுவதற்குத் தயாராக இருக்கவேண்டும்" என்று கூறினான் தங்கமணி. இதற்குள் காலையில் அதிக நேரமாகிவிட்டபடியால் கண்ணகி எதிர் பார்த்துக்கொண்டிருப்பாள் என்ற எண்ணத்துடன் தங்குமிடத்திற்குப் புறப்பட்டான் தங்கமணி. சுந்தரமும் பின் தொடர்ந்தான்.

வழியிலே ஒரு சுவையான, சுத்தமான தண்ணீர் இருக்கும் ஓர் அதிசயக் கிணற்றைப் பார்த்துக் கொண்டு இருப்பிடத்திற்கு வேகமாக நடந்தார்கள்.

அந்த இடத்தில் நல்ல தண்ணீர் கிடைப்பது ஓர் அதிசயந்தான்.

"கண்ணகி, ஒரு எக்ஸ்டிரா டிபன் தரமுடியுமா?" என்று கேட்டான் சுந்தரம்.

"நீதான் சாப்பட்டு ராமனுயிற்றே! அதற்காகவே அம்மாவும் அதிகமாகத் தயார் பண்ணியிருக்கிருர்கள்" என்று சிரித்துக்கொண்டே பதில் அளித்தாள் கண்ணகி.

"இல்லை, ஏதோ கடப்பாரையைக் கொண்டு இடி இடியென்று இடிக்க வேண்டுமாம். அதைச் சமாளிக்கத்தான் கேட்டேன். நினைத்தாலே பசி எடுக்கிறது" என்று நகைத்தான் சுந்தரம்.

## கடப்பாரையும் சிறுவர் முயற்சியும்

"ஏன் இப்படிக் கடப்பாரையைக்கொண்டு தோண்டச் சொல்லுகிறுனே! அதுவும் இருட்டில் உட்கார்ந்துகொண்டு ஆராய்ச்சிச் செய்யச் சொல்லு கிறுனே. துப்பறியும் நிபுணர் தங்கமணி என்று சர்டிபிகேட் கொடுத்துவிட்டோமே, அதன் பிறகாவது விஷயத்தை விளக்கிச் சொல்லக் கூடாதா?" என்று நெற்றியில் வழியும் வேர்வையைத் துடைத்துக்கொண்டு கேட்டான் சுந்தரம்.

"நீங்கள் ஓய்வு எடுக்கும்போது வேண்டுமானுல் சொல்லுகிறேன். இடையிடையே இப்படி ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கும்; அப்போது மேலும் விளக்கமாகச் சொல்லுகிறேன்" என்ருன் தங்கமணி. "அதுவரை வாயை மூடிக்கொண் டிருங்கள்" என்று எச்சரித்தான் தங்கமணி.

"எதற்காக இருட்டில் வேலை செய்யச் சொல்லு கிருய்? அதையாவது சொல்" என்று கேட்டான் சுந்தரம்,

"இதை விளக்குவது சுலபம். பகலில் என்ருல் பல பேர் கோட்டைக்கு வந்துகொண்டு இருப்பார்கள். விஷயம் வெளியாகிவிடும். அதற்காகத்தான் சப் இன்ஸ்பெக்டர் முத்துசாமி அவர்கள் இருட்டில் ஆராய்ச்சி செய்வதையே ஆதரிப்பதாகத் தெரிவித்தார். அநாவசியமாக வீண் வதந்திகள் பரவ வேண்டாம் என்று கண்டிப்பாக அவர் சொல்லி விட்டார். நானும் சம்மதம் கொடுத்திருக்கிறேன்" என்ருன் தங்கமணி.

"சரி, அது போகட்டும். கடப்பாரையைக் கொண்டு தோண்டச் சொல்லுகிருயே, அது எதற்கு? புதையல் ஏதாவது கிடைக்குமென்ற எண்ணமா?" சுந்தரத்தால் அதற்குமேல் தாங்கமுடியவில்லை. விஷயம் அறிந்துகொள்ள அத்தனை ஆர்வம் அவனுக்கு.

"கடற்கரைப் பகுதியிலே மாசிலா நாத சுவாமி என்று, இடிந்துபோன ஒரு கோயில் இருக்கிறது. நீங்களும் கவனித்திருப்பீர்கள். அதில் ஏதாவது பழங்கால நாணயங்கள் இருக்கின்றனவா என்று தோண்டிப் பார்ப்பதுதான் என்னுடைய நோக்கம்."

"என்ன, கொல்லிமலைக் குள்ளன் வேலையை ஆரம்பிக்கிருயா? அவன் சிலையைத் திருடினுன். நீ அஸ்திவாரத்தையே தகர்ப்போம் என்கிருய்" என்ருன் சுந்தரம்,

"இல்லை, நான் கொல்லிமலைக் குள்ளனுடைய வேலையைத் தொடர்ந்து செய்யச் சிறிதும் விரும்பவில்லை. தரங்கம்பாடிக் கோட்டை அடிக்கடி புயலாலும் இடி மின்னலாலும் தாக்கப்படுவதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். கோயிலோ பாழடைந்த நிலையில் இருக்கிறது. அதனுல்தான் இந்த ஆராய்ச்சிக்குத் துணிந்தேன்" என்று விளக்கினுன் தங்கமணி.

"டச்சுக்காரர் கோட்டையில் இந்துக்களின் நாணயம் கிடைப்பது என்பது என்ன நிச்சயம்?" என்று கேட்டான் சுந்தரம்.

"ஏன் மறுபடியும் கும்பாபிஷேகம் நடந்திருக்கக் கூடாதா, என்ன?" என்று இடைமறித்தாள் கண்ணகி.

"கண்ணகியின் யூகமும் சரியாக இருக்கலாம். மேலும் இந்தக் கோயில் டச்சுக்காரர் கோட்டை கட்டுவதற்கு முன்னுலேயே ஏற்பட்ட ஆலயம். மாணிக்கவாசகரால் பாடப்பெற்றது என்றும், குலசேகர பாண்டியன் காலத்தியது என்றும், ஆறு நூற்றுண்டுகளுக்கு முன் கட்டியது என்றும் தெரிகிறது. அதனுல்தான் எனக்கு இதில் அவ்வளவு அக்கறை ஏற்பட்டது. என்ன இருக்கிறது என்று தோண்டித்தான் பார்க்கலாமே!" என்றுன் தங்கமணி.

"அது சரி. உலோகம் அகப்படும் என்று எப்படி நிச்சயம் பண்ணிணுய்?" என்று கேட்டான் சுந்தரம்.

''அதற்குத்தான் உலோகக் கண்டுபிடிப்பானை அப்பா வாங்கிக் கொடுத்திருக்கிறாரே!'' என்றாள் கண்ணகி.

''சரி, இப்பொழுது எல்லாம் விளங்கிவிட்டது. இனி கடப்பாரையே கதி'' என்றான் சுந்தரம்.

ஜின்கா ஏதோ தீர்ப்புச் சொல்லுவதுபோல ஒருவரை மாற்றி ஒருவரை உற்றுப் பார்த்துக்கொண்டு இருந்தது. பிறகு, தனது ஆமோதிப்பைத் தெரிவிப்பது போல் ஜிங்ஜிங்கென்று குதிக்கலாயிற்று.

இருட்டினவுடன் ஒவ்வோர் இரவும் விரைவில் மூவரும் உணவு முடித்துக்கொண்டு மாசிலா நாத சுவாமி ஆலயம் சென்று, தமது ஆராய்ச்சியை முழுமுச்சுடன் தொடங்கலாயினர். கடப்பாரையின் ஒலி 'திப்திப்' என்று ஒலிக்கலாயிற்று.

கண்ணகி இயல்பாகவே விரைவில் களைத்துப் போய்விடுவாள். உடனே தங்கமணி உதவிக்கு வருவான். இப்படியாக ஒரு வாரம் சென்றுவிட்டது. அங்கே உள்ள மண் இறுகிக் கட்டியாக இருந்ததால் வேலையும் சுலபமாக இருக்கவில்லை.

வள்ளிநாயகிக்கு ஒன்றும் புரியவேயில்லை. ''எதற்காக இரவிலே போகிறார்கள்? ஒன்றும் விளங்கவேயில்லையே! இரவில் நேரங்கழித்து வந்து படுக்கிறார்கள்'' என்று தன் கணவர் வடிவேலைப் பார்த்துக் கேட்டாள். வழக்கமாக ஒவ்வொரு நாளும் மாலையில் அவர்கள் உலாவப் போவதுண்டு.

"ஏதோ முக்கியமான ஆராய்ச்சியில் ஈடுபட்டு இருப்பார்கள். அவர்களைப்பற்றி நீ கவலைப்பட வேண்டாம். பொறுப்புக் கொடுத்துவிட்டால் தாமாகவே எல்லாம் செய்துகொள்வார்கள்" என்று அன்புடனும் கவலையின்றியும் சொன்னார். வள்ளிநாயகியும் அவர் அன்பான மறுமொழியைக் கேட்டுச் சமாதானம் அடைந்தாள். முக்கியமாகத் தங்கமணி மேல் அவருக்கு அவ்வளவு நம்பிக்கை இருந்தது.

சிறுவர்களின் கடப்பாரை 'திப் திப்' பென்று இரவு நேரத்தில் ஒலித்துக்கொண்டு இருந்தது.

சுந்தரத்திற்குக் கொஞ்சம் சலிப்பு ஏற்பட்டு விட்டது. எவ்வளவு ஆழந்தான் இப்படித் தோண்ட வேண்டுமோ? அதனாலே சலிப்பு.

"அந்த உலோகக் கண்டுபிடிப்பான் என்ன சொல்லுகிறது; உலோகம் இருப்பதை மட்டும் சொல்லுகிறதா? எத்தனை அடி ஆழத்தில் என்று திட்டவட்டமாகச் சொல்லித் தொலைத்தால் நன்றாக இருக்குமே. இத்தனை கண்டுபிடித்தவர்கள் அதையும் ஏன் கண்டுபிடிக்காமல் போய்விட்டார்கள்?" என்று பெருமூச்சு விட்டான் சுந்தரம்.

"அதுவும்தான் சொல்லுகிறதே. இந்தக் கருவியைப் பயன்படுத்தினால் எத்தனை அடி ஆழத்தில் என்று கண்டுபிடிக்கலாம். அதன் ஒலியைக்

கொண்டே அனுபவத்தில் அனேகமாகச் சரியாக இவ்வளவு ஆழத்தில் என்று கணக்கிட்டுச் சொல்லி விடலாம்.''

''இன்னும் அரையடி தோண்டினுல் புதையல் கிடைக்குமா, அல்லது புஸ்வாணமாகப் போய் விடுமா?'' என்று கேட்டான் சுந்தரம்.

''புஸ்வாணமாக நிச்சயமாகப் போகாது. இன்னும் ஒருநாள் பொறுத்துக்கொள், கட்டாயம் வெற்றி கிடைத்துவிடும். இன்னும் சுமார் அரையடி தான் பாக்கி. இப்பொழுதே தோண்டுவதற்கு மண் மிகக் கட்டியாக உள்ளது.''

''அப்படியா, அப்பப்பா! இந்தக் கடப்பாரை யைக்கொண்டு தோண்டித் தோண்டிக் கையெல்லாம் கொப்புளமாகிவிட்டது. எப்படியாவது ஒருநாளை மெல்ல ஓட்டலாம். இன்று இவ்வளவோடு நிறுத்த லாம், அவசரமில்லை'' என்ருன் சுந்தரம்.

''அடே! உனக்கு நல்ல விருந்து போடப் போகி றேன். மூக்குப் பிடிக்கத் தின்னலாம். பயப்படாதே'' என்று கேலி செய்தாள் கண்ணகி. ஆனுல் ஒருநாள், 24 மணி நேரத்திற்குள் இப்படி எதிர்பாராத இடைஞ்சல்கள் வரும் என்று அவர்கள் மூவரும் கனவில்கூட எண்ணியிருக்க மாட்டார்கள்,

## எதிர்பாரத இடையூறுகள்

வடிவேலுவின் உற்ற நண்பராயிருந்த சப்இன்ஸ்பெக்டர் முத்துசாமி உடனே அவசரமாக 24 மணி நேரத்திற்குள் மாற்றலாகிப் புறப்பட்டு விட்டார். இந்த மாறுதல் எதிர்பார்த்ததுதான். அவருக்குப் பதிலாக வந்தவரும் நல்லவர்தாம். ஆனல், அநாவசியமாக வீண் தொல்லைகளை விலைக்கு வாங்கக்கூடாது என்ற நோக்கம் உடையவர். எனவே, கடப்பரையைக் கொண்டு தோண்டி ஆராய்ச்சி செய்வதை உடனே நிறுத்திவிட வேண்டும் என்று உத்தரவு போட்டுவிட்டார்.

தங்கமணிக்கு இது ஒரு பேரதிர்ச்சியாக முடிந்தது. தாங்கள் மூவரும் சங்ககிரிக் கோட்டையின் புதையலைக் கண்டுபிடித்த விவரத்தையும், கொல்லி மலைக்குள்ளனுடைய படுமோசமான சிலைக்கடத்தல் களை எவ்வாறு கண்டுபிடித்தோம் என்பதையும் அவற்றில் தாங்கள் எவ்விதப் பயனும் எதிர்பாராமல்

உழைத்ததையும் நல்ல சர்டிபிகெட் பெற்றுள்ளதை யும் கூறினன். அதேபோல இதையும் தாங்கள் பயனை எதிர்பாராமல் தான் ஆராய்ச்சி செய்வ தாகவும் விளக்கமாக எடுத்துக் கூறினன் தங்கமணி.

"அந்த சர்டிபிகேட் எல்லாம் எங்கே காட்டு பார்க்கலாம்" என்று கேட்டார், புதிதாக வந்த சப்இன்ஸ்பெக்டர். ஆனல் அப்படிக் கேட்பார் என்று தங்கமணி எதிர்பார்க்கவில்லை. "சர்டிபிகேட் என் கைவசம் இல்லை. வேண்டுமானல் என் தந்தை பேராசிரியர் வடிவேலு அவர்களிடமே ஒருவேளை இருக்கலாம், கேட்டுப் பார்க்கிறேன்" என்று சொல்லி விட்டு, நேராகத் தந்தையிடம் சென்று, விஷயத்தை விளக்கிக் கூறினன். "சர்டிபிகேட் இல்லாமல் அவர் எதுவும் நம்பமாட்டேன் என்கிருர். ஒருவேளை, நீங்கள் சொன்னல் நம்புவாரோ, என்னவோ" என்று தெரிவித்தான் தங்கமணி. "சர்டிபிகேட் என்னிடமும் இல்லை. நான் நேரிலே சொல்லிப் பார்க்கிறேன்," என்று புறப்பட்டார் போலீஸ் அதிகாரியிடம்.

"மாமா, நீங்கள் சொன்னலும் அவன் நம்பிக்கை அடையமாட்டான். வீணுக அவமானப்படாதீர் கள்" என்று சுந்தரம் எச்சரிக்கை செய்தான்.

சுந்தரம் எச்சரித்தபடியே நடந்தது. "நீங்கள் பொறுப்புள்ளவர்தான். அதில் சந்தேகம் இல்லை. ஆனல், எதற்கும் ஓர் ஒழுங்குமுறை வேண்டும் அல்லவா? வேண்டுமானல் உடனே தந்தி கொடுத்து

வரவழைக்கலாம். இப்படிச் சொல்வதற்கு என்னை மன்னிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்'' என்று முடிவாகப் புதிய போலீஸ் 'சப்இன்ஸ்பெக்டர் தெரிவித்துவிட்டார்.

''அவர் சொல்வதிலும் ஒரு நியாயம் இருக்கிறது. வீணுகத் தொந்தரவில் மாட்டிக்கொள்ள வேண்டாம் என்று அவர் கருதுகிருர்'' என்று தங்கமணியிடம் கூறிஞர் தங்கவேலு.

பின்பு, அவர் உடனே சர்டிபிகேட் முதலிய சான்றுகளையெல்லாம் அனுப்பும்படி தந்தி கொடுத்தார். ''உங்கள் ஆராய்ச்சிக்கு இரண்டு நாட்கள் ஓய்வு. அதற்குள் சர்டிபிகேட் வந்துவிடும். பொறுத்துக்கொள்ளுங்கள்'' என்றும் கூறிவிட்டார்.

# கண்ணகியைக் காணோம்

வீட்டிற்குத் திரும்பும்போது மற்றோர் அதிர்ச்சி காத்திருந்தது. கண்ணகி திடீரென்று மறைந்துவிட்டாள். எவ்விடத்தில் தேடிப் பார்த்தும் அகப்படவில்லை.

தங்கமணி உடனே கண்ணகியைக் கண்டு பிடிப்பதில் வேகமாக முனைந்தான்.

"சுந்தரம், நீ இந்த ஆராய்ச்சியைப்பற்றி வெளியில் யாரிடமாவது பேசிக்கொண்டு இருந்தாயா?" என்று கேட்டான் தங்கமணி.

சுந்தரம் சற்று நேரம் யோசித்துப் பார்த்துவிட்டு, "நான் யாரிடமும் இது பற்றிப் பேசவில்லை. ஆனால் 'கண்ணகியிடம், இன்னும் ஒருநாளில் புதையலைக் கண்டுபிடித்துவிடுவோம்' என்று ஒரு புதர் மறைவில் உற்சாகமாகப் பேசிக்கொண்டிருந்தேன்" என்று தெரிவித்தான்.

''சரி, நீங்கள் எல்லோரும் ஓட்டை வாய்கள். உளறிக் கெடுத்துவிட்டீர்கள். இதற்குத்தான் உங்களிடம் சொல்லத் தயங்கினேன். ஆனால் இப்பொழுது பேசிப் பயனில்லை. உடனே நாம் கண்ணகியைக் கண்டுபிடித்தாக வேண்டும்'' என்று கூறிக்கொண்டே செயலில் இறங்கினன். புதிதாக யார் யார் அந்த வட்டாரத்திற்கு வந்திருக்கிறார்கள் என்று வேகமாக ஆராயத் தொடங்கினான். அப்படி ஆராயத் தொடங்கியதும், புதிதாக ஆறு கூடாரமடித்துக்கொண்டு ஒரு ஜிப்ஸிக் கூட்டம் தங்கியிருப்பதை அறிந்தான்.

''ஜின்கா, இனி உனக்குத்தான் வேலை அதிகம்'' என்று கூறிவிட்டுப் பலவிதச் சைகைகளால் கண்ணகியின் இருப்பிடத்தைக் கண்டு வரும்படி ஜின்காவை ஏவினான் தங்கமணி. அதுவரை வேலையில்லாமல் சோம்பிக்கிடந்த ஜின்கா, உற்சாகமாக ஜிப்ஸிக் கூட்டத்திலே தனது ஆராய்ச்சியைத் தொடங்கிவிட்டது.

சாதாரணமாக, ஜிப்ஸி கூட்டத்தில் பெரியவர்கள் எல்லாம் பகல் நேரத்தில் வெளியே சென்று விடுவார்கள். குழந்தைகள்தாம் விளையாடிக் கொண்டிருக்கும். இந்தக் குழந்தைகளை எப்படி ஏமாற்றிவிட்டு, யாருக்கும் தெரியாமல் கண்ணகியைக் கண்டுபிடிப்பது என்று யோசித்தது ஜின்கா.

நல்ல வேளையாக நாவல் பழம் பழுத்திருந்த பருவம் அது. உடனே உயரமான ஒரு மரத்தில் ஏறி,

கைநிறைய நாவல் பழத்தை எடுத்துக்கொண்டு அந்த ஜிப்ஸி குழந்தைகளுக்குத் தாராளமாக ஜின்கா வழங்கிற்று. பல வேடிக்கைகளும் செய்து காண்பித்தது.

உடனே ஜின்காவிடம் பெரிய குழந்தைகளின் கூட்டமே கூடிவிட்டது. ஜின்கா 'ஜங்ஜங்' என்று குதிப்பதும், அதே சமயத்தில் அவர்களை ஏமாற்றி விட்டுக் கூடாரத்தின் உள்ளே எட்டிப் பார்ப்பதுமாக இருந்தது. ஜின்கா கொடுத்த நாவல் பழத்திலும் அது செய்யும் வேடிக்கைகளிலும் குழந்தைகள் மயங்கிக் கிடந்தன. ஆகையால், அது கூடாரத்தை எட்டிப் பார்ப்பதை எவரும் கண்டுகொள்ளவே இல்லை.

ஜிப்ஸிகள் போட்டிருந்த ஆறு கூடாரங்களிலும் அது நன்றாகப் பார்த்துவிட்டது. ஆனால், அங்கு எங்குமே கண்ணகியைக் காணவில்லை. மீண்டும் ஒரு முறை நன்றாகப் பார்த்துவிட்டு ஜின்கா ஏமாந்து போயிற்று. அதனால் மிக்க சோர்வுடன் அது தங்கமணியிடம் திரும்பிற்று.

ஜின்காவின் தோற்றத்தைக் கண்டவுடனே, அதனால் கண்ணகியை ஜிப்ஸி கூடாரத்தில் கண்டு பிடிக்க முடியவில்லை என்பதை உடனே தங்கமணி தெரிந்துகொண்டான். வழக்கமாக அது வரும் போதே வெற்றியா தோல்வியா என்பதைத் தங்கமணி கண்டுகொள்வான். மேலும், ஜின்கா

தனது தோல்வியை ஒப்புக்கொள்வதற்கு அடையாள மாகத் தரையில் படுத்துப் படுத்துக் காண்பிக்கும் ஒரு புது விதமான செய்கையையும் அது கற்றுக்கொண் டிருந்தது. தனக்கு இட்ட பணியில் வெற்றி என்ருல் ஜின்கா ஜிங்ஜிங்கென்று குதித்துக்கொண்டே வரும். இப்பொழுது ஜின்கா தரையில் படுத்துப் படுத்துத் தனது தோல்வியை ஒப்புக்கொள்ளும் விதமாக வந்தது.

உடனே தங்கமணி தன் தந்தை பேராசிரியர் வடிவேலுவிடம் விஷயத்தை விளக்கிக் கூறிஞன். அப்படிக் கூறும் பொழுதே கண்ணீர் பிதுங்குவதை வடிவேலு கவனித்தார்.

"இதற்காக நீ கவலைப்பட வேண்டாம். நாம் விரைவில் கண்ணகியைக் கண்டுபிடித்துவிடுவோம். கவலைப்படாதே. வள்ளிநாயகியிடம் மட்டும் இதைத் தெரிவிக்கவேண்டாம். அநாவசியமாக அவளுக்கு வீண் கவலையை உண்டாக்கக்கூடாது. எப்படியாவது அவளிடம் கண்ணகி ஒன்றிரண்டு நாளைக்கு வரமாட்டாள் என்பதைப் பக்குவமாகச் சொல்லிவிட வேண்டும்" என்ருர் பேராசிரியர் வடிவேலு.

"எப்படிச் சொல்லுவது? பொய் சொல்ல நாக்குக் கூசுகின்றதே! அதைப்பற்றித்தான் நான் கவலைப் படுகிறேன்" என்று மறுமொழியாகச் சொன்ஞன் தங்கமணி.

"ஒழுகை மங்கலம் என்று பக்கத்தில் புகழ் பெற்ற ஒரு கோயில் இருக்கிறது. அங்கே திருவிழா என்றும் அறிகின்றேன். பல வேடிக்கைகள் நடக்கும் என்பதனால் அங்கே சென்றிருக்கிருள் என்று கூறி விடலாம்" என்ருர் பேராசிரியர்.

"கண்ணகியைக் கடத்திக்கொண்டு போய் இருப்பதன் நோக்கம் என்ன என்பதுதான் விளங்க வில்லை. என் மூளை குழம்பியிருக்கிறது. சரியாக ஆலோசனை செய்ய முடியவில்லை" என்று ஒப்புக் கொண்டான் தங்கமணி.

"இதற்கெல்லாம் நீ அஞ்சக்கூடாது. சாதாரண மாக, ஜிப்ஸிகள் பெண்களைக் கடத்திக்கொண்டு போவார்களே ஒழிய, அவர்களுக்குத் துன்பம் நேரும் வகையில் நடந்துகொள்ள மாட்டார்கள். உயிருக்கு ஆபத்து ஒன்றும் வந்துவிடாது. கவலைப்படாதே. இப்படித் துப்புக் கண்டுபிடிப்பதில் பல சம்பவங்கள் நேரும். ஆகையால் அவற்றைப்பற்றிக் குழப்பமோ கலக்கமோ கொள்ள வேண்டியதில்லை" என்று அமைதியாகச் சொன்ஞர் பேராசிரியர் வடிவேலு.

அவருடைய அமைதியான தோற்றத்தைக் கண்டு தங்கமணிக்கே ஆச்சரியமாக இருந்தது.

"ஆனல் கண்ணகியை மட்டும் கடத்திக்கொண்டு போவதற்குக் காரணமென்ன? கடத்திக்கொண்டு போவதாஞல் சுந்தரத்தையும் கடத்திக்கொண்டு

போயிருக்கவேண்டும். அதுதான் எனக்கு விளங்க வில்லை'' என்று மீண்டும் கூறினன் தங்கமணி. அதற்கு விளக்கம் தேவை என்றும் எதிர்பார்த்தான்.

பேராசிரியர் வடிவேலு சற்று நேரம் சிந்தனையில் ஆழ்ந்தார். பிறகு உடனே ''மாசிலா நாதர் கோயிலைப் பற்றி அவர்கள் பேசிக்கொண்டார்களா? அது முதலில் தெரியவேண்டும்,'' என்றார்.

உடனே சுந்தரத்தை அழைத்து, ''நீங்கள் இரு வரும் பேசிக்கொண்டிருந்த பொழுது மாசிலாநாதர் ஆலயத்தைப்பற்றிக் குறிப்பிட்டீர்களா?'' என்று கேட்டார் வடிவேலு.

''இல்லவேயில்லை. அது எனக்கு நன்றாக நினை விருக்கிறது''' என்று விடை பகர்ந்தான் சுந்தரம். இப்பொழுது அவன் கேலிப் பேச்செல்லாம் எங்கேயோ மறைந்துவிட்டது. தான் தவறு செய்து விட்டோம் என்ற குற்ற உணர்வினல் அவன் முகம் வாடியிருந்தது.

''மாசிலாநாதர் ஆலயத்தைப்பற்றி எப்படிப் பேசவில்லை என்று அவ்வாறு நிச்சயமாகச் சொல்லு கிருய்? பேச்சுவாக்கில் மாசிலாநாதர் ஆலயம் என்று உற்சாகத்தில் சொல்லியிருக்க முடியாதா?'' என்று தங்கமணி கேட்டான். ஆராய்ச்சியிலிருக்கின்ற ஒரு விஷயத்தைப்பற்றி வெளியில் பேசக்கூடாது என்று

கண்டனம் தெரிவிப்பது போல் அவன் குரல் ஒலித்தது.

"மாசிலாநாதர் என்ற பேச்சுக்கே இடமில்லை. எனக்கு அது நிச்சயமாகத் தெரியும். ஏனென்ருல், அங்கேதான் இந்த ஆராய்ச்சியை நடத்துகிரும். அதனுல் அந்த ஆலயத்தைப்பற்றிப் பேசவே இல்லை" என்று தெளிவாகச் சொன்னுன் சுந்தரம். "'நாளை புதையல் கிடைத்துவிடும்' என்றுதான் மீண்டும் மீண்டும் சொல்லிக்கொண்டிருந்தோம்" என்று அவன் மேலும் விளக்கிஞன்.

"கண்ணகியை அந்த ஜிப்ஸிகள் ஏன் கடத்திச் சென்ருர்கள் என்பது இப்பொழுது புரிந்துவிட்டது. ஆராய்ச்சி நடக்கும் இடம் தெரியாதாகையாலும், மறுநாளே அந்த ஆராய்ச்சியில் வெற்றி காண்போம் என்பது தெரிந்ததாலும், கண்ணகி என்ற ஒரு சிறு பெண்ணிடமிருந்து சுலபமாக அந்த ஆராய்ச்சி எங்கு நடக்கிறது என்று தெரிந்துகொள்ளலாம் என்பதே அவர்கள் நோக்கமாய் இருக்கவேண்டும்" என்ருர் வடிவேலு.

"போலீஸ் ஜவான்களைக்கொண்டு கண்காணித்தால் அந்த ஜிப்ஸிகளைக் கண்டுபிடித்துவிடலாம். ஆனுல், அதுவரையிலும் நாம் பொறுத்திருக்க வேண்டியதில்லை. ஒழுகை மங்கலம் மாரியம்மன் திருவிழாவுக்கு நேராகச் சென்று ஆராய்ந்து பார்த்தால், ஒருவேளை கண்ணகியை அங்கே கண்டு

பிடித்துவிடலாம். வள்ளிநாயகிக்கும் வீண்கலக்கம் ஏற்படவேண்டாம். இப்பொழுது உடனே ஒழுகை மங்கலம் மாரியம்மன் திருவிழாவுக்குப் போவதுதான் முக்கியமான வேலை'' என்றார் வடிவேலு.

''எதற்கும் இரவிலே மாசிலாநாதர் கோயிலில், நாம் ஆராய்ச்சி செய்யும் இடத்திலே சில போலீஸ் ஜவான்களைக் காவலாக இருக்கச் செய்ய வேண்டும். ஒருவேளை, கண்ணகியிடமிருந்து அவர்கள் உண்மையைத் தெரிந்துகொண்டார்களானால் நாம் ஏமாந்து போய்விடுவோம். ஆகையால், முன் ஜாக்கிரதையாக நாம் இருப்பதே நல்லது என்று தோன்றுகிறது'' என்று தன் தந்தையை நோக்கி யோசனையோடு கூறினான் தங்கமணி.

''உன்னுடைய யோசனையும் சரியாகவே படுகின்றது. நாம் முன்ஜாக்கிரதையாக இருப்பதே நல்லது. எதற்கும் முதலில் போலீஸ் நிலையத்திற்குச் செல்லுவோம்'' என்றார் வடிவேலு.

இவ்வாறு உரையாடிக்கொண்டே வடிவேலு முதலியோர் வேகமாக நடந்தனர். அதற்குள் போலீஸ் நிலையத்தை அடைந்துவிட்டதால், நடந்த நிகழ்ச்சிகளை போலீஸ் சப்இன்ஸ்பெக்டருக்கு விளக்கிச் சொன்னார் தங்கவேலு. சப்இன்ஸ்பெக்டரும் தங்கமணியின் ஆலோசனையை உடனே ஆமோதித்தார். தங்கமணியின் முன்யோசனையைக் கண்டு

தந்தை வடிவேலுவும் மிகப்பெருமையடைந்தார். உடனே, மாசிலாநாதர் கோயிலில், தங்கமணியும் மற்ற இரண்டு இளைஞர்களும் ஆராய்ச்சி நடத்துகின்ற இடத்திலே, மூன்று நான்கு போலீஸ் ஜவான்களை எச்சரிக்கையாகக் காவலிருக்கும்படியும், ஜிப்ஸிகள் இரவில் வந்தால் அவர்களைக் கைது செய்து வைக்கும் படியும் ஆணையிட்டுவிட்டு, ஒழுகை மங்கலம் மாரியம்மன் திருவிழாவுக்குத் தமது ஜீப் காரில் விரைந்தார் சப் இன்ஸ்பெக்டர். அவரோடு துப்பாக்கி ஏந்திய மூன்று நான்கு போலீஸ் ஜவான்களும் உடன் சென்றார்கள். இப்பொழுது அவருக்கே இந்த எதிர்பாராத நிகழ்ச்சிகளால் மிகுந்த அக்கறை உண்டாகிவிட்டது. துப்புக் கண்டுபிடிக்க வேண்டு மென்பதில் அவருக்கு ஆர்வம் ஏற்பட்டது.

## ஒழுகை மங்கலம் மாரியம்மன் திருவிழா

பல ஆண்டுகளுக்கு முன்னுல் ஒரு டேனிஷ் துரை இருந்தார். அவர் மிகுந்த கடவுள் பக்தி உடையவர். காலை மாலை இரண்டு வேளையும் தவருது பிரார்த்தனை செய்வார். புதிதாக இங்கு வந்த இடத்தில் அவ்வாறு பிரார்த்தனை செய்வதற்கு வசதியில்லை. ஆகையால், புனித மரியம்மையின் சிலை ஒன்றுக்கு ஏற்பாடு செய்து, அதைத் தரங்கம்பாடிக் கோட்டை யிலிருந்த மாதா கோயிலில் நாட்டிப் பிரார்த்தனை புரியலானுர். அவர் வசித்த இடத்திற்கும் தரங்கம் பாடிக் கோட்டைக்கும் இடையே உப்பனுறு என்ற ஒரு சிறிய ஆறு ஓடுகின்றது. அந்த ஆற்றின் தண்ணீரைக் கொண்டு விவசாயம் எதுவும் செய்ய முடியாது. அப்படி உப்பாக இருந்தது அந்த உப்பனுறு. டேனிஷ் துரை வசிக்குமிடத்துக்கும் மாதா கோயிலுக்கும் இடையே உப்பனுறு ஓடுவதால், தோணி மூலம் இரண்டு வேளையும் ஆற்றைக் கடக்க ஏற்பாடு

செய்திருந்தார். சில ஆண்டுக்கலாம் இவ்வாறு நடந்தபிறகு அந்த டேனிஷ் துரை அங்கிருந்து சென்றுவிட்டார்.

அவர் சென்றபோது புனித மரியம்மையின் சிலையையும் பெயர்த்தெடுத்துச் சென்றுவிட்டார். சிலை வைத்த இடத்தில் மற்ெருரு சிலை வைக்க மக்கள் எண்ணிஞர்கள். ஒருவருக்குத் திடீரென்று ஓர் எண்ணம் தோன்றியது. "ஒரு கன்னி மாதாவுக்குப் பதிலாக ஏழு கன்னிகளையும் (சப்த கன்னியர்) ஏன் அங்கு பிரதிஷ்டை செய்யக்கூடாது" என்று சொன்ஞர். அந்த எண்ணம் பெரும்பாலும் சரி என்று தோன்றியதால், அங்கே சப்த கன்னிகளைப் பிரதிஷ்டை செய்து கும்பாபிஷேகமும் நடத்திஞர் கள்.

நாளாக ஆக இந்த ஏழு கன்னியர்களும் ஒருங்கே இணைந்தாற்போல ஒழுகை மங்கலம் மாரியம்மன் தோன்றியது. அது மிகவும் சக்தி வாய்ந்த தெய்வமாகக் கொண்டாடப்படுகிறது. புனித மரியம்மையே மாரியம்மஞக உருவெடுத்திருக்கிருள் என்றுகூட மக்களில் பல பேர் நம்பிஞர்கள்.

ஒழுகைமங்கலம் மாரியம்மனுக்கு ஆண்டு தோறும் தேர்த்திருவிழா சிறப்பாக நடைபெறும். இந்துக்களும் கிறிஸ்தவர்களும் ஒன்ருகக் கூடித் தொழுவார்கள். இவ்வாறு நடப்பதை இன்றும்

காண்கிறோம். இங்கு ஒரு தனிப்பட்ட நிகழ்ச்சி என்னவென்றால், பூக்குழியில் பல பக்தர்கள் வேண்டிக்கொண்டபடி தீ மிதித்தலாகும். சுமார் இருபதடி நீளத்திற்கு விறகுக் கட்டைகளைக்கொண்டு எரிய வைத்துவிடுவார்கள். நெருப்பு அனல் வீசிக் கொண்டிருக்கும். ஆனால், பக்தர்கள், வேண்டுதலையின்மேல் அந்த நெருப்பிலே நடப்பார்களானால் நெருப்பு சுடாதாம்; பூப்போல அவ்வளவு மிருதுவாக இருக்குமாம். அதனாலேதான் பூக்குழி என்று அதற்குப் பெயர் வந்ததாம்.

ஒழுகை மங்கலத் திருவிழாவின்போது இந்த அற்புதக் காட்சியைக் காணப் பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடுவார்கள்.

மக்கள் கூடின இடத்திலே குடை ராட்டினம், பலகாரக் கடைகள், துணிக்கடைகள், விளையாட்டுச் சாமான்கள், வளையல், ரிப்பன் கடைகள் முதலியவை தாமாகவே தோன்றிவிடும். இவ்வாறு ஒருநாள் முழுவதும் ஒரே கொண்டாட்டமாகக் கழியும்.

போலீஸ் சப்இன்ஸ்பெக்டர் ஜீப் காரிலே செல்லும்போது மேலே கண்ட விவரங்களையெல்லாம் தெரிவித்தார்.

"முதலிலே பூக்குழியைப் பார்க்கவேண்டும். நான் இதுவரையில் பார்த்ததில்லை. நெருப்பு

எவ்வாறு சுடாமல் இருக்கும்?" என்று தனது ஆவலைத் தெரிவித்தான் சுந்தரம்.

"ஆமாம், ஒருவேளை ஜிப்ஸிகளுடன் கண்ணகியும் அங்கு இருக்கலாம்" என்றான் தங்கமணி.

தங்கமணி நினைத்தது உண்மையாயிற்று. ஆனால் அங்கு எல்லாரையும் விலக்கிக்கொண்டு செல்லுவது தான் மிகுந்த சிரமமாக இருந்தது. நல்ல வேளை, போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் இருந்தார். அவருடன் போலீஸ் ஜவான்களும் இருந்தார்கள். போலீஸ் இன்ஸ்பெக்டரைக் கண்டவுடனே மரியாதையாக வழிவிட்டார்கள். தங்கமணியும் அவன் தோளிலே வீற்றிருக்குப் ஜின்கா என்ற குரங்கும் ஆவலோடு வேடிக்கை பார்த்துக்கொண்டே வந்தார்கள்.

ஜிப்ஸிகளின் கூட்டம் எப்படியோ முண்டியடித்துக்கொண்டு பூக்குழிக்கு மிக அருகிலே இடம் பிடித்துக்கொண்டுவிட்டது. முதலில் அந்த ஜிப்ஸிகளின் கூட்டத்தில் கண்ணகியைக் கண்டு பிடிப்பது மிகுந்த சிரமமாக இருந்தது. ஜின்காதான் கண்ணகியை முதலிலே அடையாளம் தெரிந்து கொண்டது. ஜிப்ஸிகளின் அலங்கார ஆடைகளில் அவள் காணப்பட்டதால் அவளும் ஒரு ஜிப்ஸியாகவே தோன்றினாள். கூர்மையான பார்வையுடைய தங்கமணிக்குக்கூட முதலில் அவளை அடையாளம் கண்டு பிடிக்க முடியவில்லை.

ஜின்கா ஓரே தாவில் கண்ணகியை அடைந்தது. அதை எதிர்பார்த்தது போலக் கண்ணகியும் சுருக்க மாக ஒரு கடிதம் எழுதி வைத்திருந்தாள். அதை உடனே மெதுவாக ஜின்காவிடம் கொடுத்து விட்டாள். அதிலே "இன்று இரவு மாசிலாநாதர் ஆலயத்திற்கு ஜிப்ஸிகள் வரத் திட்டமிட்டிருக் கிறுர்கள். அங்கே தயாராக வரவும்" என்று எழுதப்பட்டிருந்தது.

பூக்குழியிலே எல்லாருடைய கவனமும் சென் றிருந்ததால் ஜின்கா வந்ததையும், கண்ணகி கடிதம் கொடுத்ததையும் யாருமே கவனிக்கவில்லை. குரங்கு வந்ததுகூடத் தெரியவில்லை. பூக்குழியில் தீ மிதிப் பதைக் காணவேண்டும் என்ற ஆசையே மிகுந் திருந்தது.

"வந்த வேலை முடிந்தது. தீமிதித்தலைக்கூடக் கவனியாமல் உடனே புறப்படவேண்டியதுதான்; தாமதிக்கக்கூடாது" என்று அவசரப்படுத்தினுன் தங்கமணி.

"கண்ணகியை விட்டுவிட்டா?" என்று கவலையோடு கேட்டான் சுந்தரம்.

"கண்ணகிக்கு யாதொரு தீங்கும் வராது. மாசிலா நாதர் ஆலயத்தில் என்ருல் கையும் களவுமாகக் கண்டு பிடித்துவிடலாம். இங்கே வீண் குழப்பம் எதற்கு?" என்ருன் தங்கமணி,

தங்கமணி கூறியவாறே தரங்கம்பாடிக்கு உடனே விரைந்தார்கள், போலீஸ் சப்இன்ஸ் பெக்டரும் மற்ற ஜவான்களும்.

அவர்கள் தங்குமிடத்திற்கு விரைந்ததும் சர்ட்டி பிகேட்கள் எல்லாம் வந்து தயாராகக் காத்துக் கொண்டிருந்தன. அவற்றை உடனே போலீஸ் சப்இன்ஸ்பெக்டரிடம் கொண்டுசென்று ஒவ்வொன்ருகக் காட்டிஞன் தங்கமணி. போலீஸ் சப்இன்ஸ்பெக்டர் முற்றிலும் திருப்தியடைந்ததோடு "எங்களால் ஆன உதவியைச் செய்கிறோம்" என்று உற்சாகமாகப் பதிலளித்தார். போலீஸ் சப்இன்ஸ் பெக்டருக்குத் தாங்களும் அந்தக் கண்டுபிடிப்பில் பங்கு கொள்ளவேண்டும் என்ற ஆர்வம் மிகுதியாக உண்டாயிற்று. தங்கமணி முதலில் உதவி ஒன்றும் தேவையில்லை என்று சொல்ல நினைத்தான். ஆனால், இன்ஸ்பெக்டருக்கு மறுபடியும் சந்தேகம் உண்டாகும் என்று நினைத்து அந்த எண்ணத்தை மாற்றிக்கொண் டான். மேலும், ஜிப்ஸிகளைக் கையும் களவுமாகப் பிடிக்கவேண்டுமாதலாலும், கண்ணகிக்கு ஏதாவது தீங்கு நேராமல் இருக்கவேண்டும் என்பதனாலும் அந்த எண்ணத்தை உடனே வேறு யோசனையின்றி ஒப்புக்கொண்டான்.

"உங்கள் உதவி எங்களுக்கு நிறையவேண்டும். ஜிப்ஸிகளைக் கைது செய்தாக வேண்டுமல்லவா? ஆகையால் உடனே புறப்படுவது நல்லது" என்று அவசரப்பட்டான் தங்கமணி,

போலீஸ் இன்ஸ்பெக்டருக்கும் ஜவான்களுக்கும் உணவு அருந்தக்கூட நேரமில்லை. கொஞ்சம் தாமத மானுல் தங்கள் திட்டம் எல்லாம் தோற்றுப்போகும் என்று நினைத்து, உடனே அவர்கள் இரவிலே மாசிலா நாதர் ஆலயத்திற்கு விரைந்து சென்ருர்கள்.

அதற்குள் தங்கமணி எதிர்பார்த்தவாறே ஜிப்ஸிகள் அங்கே வந்துவிட்டார்கள். ''எங்கே ஆராய்ச்சி நடக்கிறதென்று சொல்'' என்று அதிகாரத் தோடு ஒரு ஜிப்ஸி கண்ணகியிடம் கேட்டான்.

கண்ணகி, போலீஸ் ஜவான்கள் உதவிக்கு நிச்சய மாக வருவார்கள் என்று நம்பியதால் தைரியமாகவே பதிலளித்தாள். ''இதோ, இந்தக் குழியில்தான் நாங்கள் கடப்பாரை கொண்டு தோண்டினேம்'' என்று சுமார் இரண்டடி ஆழம் உள்ள குழியைக் காண்பித்தாள் கண்ணகி. ''அடேயப்பா! இதென்ன இரண்டு முழ ஆழமாய் இருக்கிறதே. கொஞ்சம் தோண்டினுல் உடனே புதையல் கிடைத்துவிடும் என்று எப்படிச் சொன்னுய்?'' என்று உறுமினுன் மற்ருெரு ஜிப்ஸி.

''நானும் சுந்தரமும் பேசிக்கொண்டதெல்லாம் உண்மைதான். இரண்டு மூன்று அங்குலம் அல்லது அரையடி தோண்டுவதற்கு முன்னதாகவே புதையல் கிடைத்துவிடும். அதுவும் நாளைக்கே கிடைத்துவிடும் என்று என்னுடைய அண்ணன் தங்கமணி கூறியிருந் தான். அவன் வாக்குப் பொய்யானதில்லை. வேண்டு

மானால் தோண்டிப்பாருங்கள்'' என்று மிடுக்கோடு பதிலளித்தாள் கண்ணகி.

உடனே ஜிப்ஸிகள் தோண்டத் தொடங்கினார் கள். கண்ணகி கூறியது போலவே எல்லாம் உண்மையாயின. தங்கமணி யூகித்ததும் சரியாயிற்று. ஜிப்ஸிகள் பழங்காலத்து நாணயங்களையும் நவமணி களையும் பார்த்ததே இல்லை. அதனால் அவர்கள் கையில் அவற்றை எடுத்துக்கொண்டு ஆச்சரியப்படும் போதே, அங்கு தயாராக மறைந்திருந்த போலீஸ் ஜவான்கள், கையும் களவுமாகப் பிடித்து அவர்களைக் கைது செய்தார்கள். போலீஸ் ஜவான்கள் அங்கு எப்படி வந்தார்கள் என்று ஜிப்ஸிகளுக்குப் புரியவே இல்லை.

மறுநாள் பொழுது விடிந்தது. உடனே தொல் பொருள் இலாகா அதிகாரிக்குத் தந்திமூலம் இந்தக் கண்டுபிடிப்பைத் தெரிவித்தார்கள். தொல்பொருள் இலாகா புதிய வரலாற்று உண்மைகளைக் கண்டறிவதை நோக்கமாக உடையது. அதனால் உடனே புறப்பட்டுத் தம் சொந்தக் காரிலேயே தொல்பொருள் இலாகா அதிகாரி திரு. நாகசாமி, வந்து சேர்ந்தார். தங்கமணி, சுந்தரம், கண்ணகி, ஜின்கா ஆகிய நால்வரையும் வாயாரப் புகழ்ந்தார் தொல்பொருள் இலாகா அதிகாரி.

''ஒரு சர்டிபிகேட் கொடுங்கள், ஏனென்றால்......'' என்று இழுத்தான் சுந்தரம்.

புதிதாக வந்த போலீஸ் சப்இன்ஸ்பெக்டர் சுந்தரத்தின் உட்கருத்தை மெச்சித் தட்டிக்கொடுத்தார்.

"எங்கள் இலாகாவே அப்படித்தான். சுலபமாக ஏமாந்து போய்விடக்கூடாது அல்லவா?" என்று சிரித்துக்கொண்டே சப்இன்ஸ்பெக்டர் மறுமொழி புகன்றார்.

"சப்இன்ஸ்பெக்டர் என்றால் அப்படித்தான் இருக்கவேண்டும். உங்கள்மேல் தவறு இல்லை. உங்கள் கடமையையே செய்தீர்கள். சந்தேகம் தீர்ந்தவுடனே தாங்களும் ஜவான்களும் உற்சாகமாக உதவியதற்கு மிக்க நன்றி" என்றான் தங்கமணி.

ஜின்காவுக்கு அளவு கடந்த சந்தோஷம். அது ஜங்ஜங்கென்று குதித்துக்கொண்டிருந்தது. எல்லாரும் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கினர்.

இதற்குள் கோடை விடுமுறை முடிந்துவிட்டது. அடுத்த நாள் உடனே புறப்பட்டு ஆகவேண்டும். வள்ளிநாயகிக்கும், கடற்காற்று சதா வீசிக்கொண்டு இருக்கும் தரங்கம்பாடிக்கு வந்ததால், உடம்பு நல்ல வலிமை அடைந்துவிட்டது. நல்ல வேளையாகக் கண்ணகியின் கடத்தலைப்பற்றி வள்ளிநாயகி அறிந்திருக்கவே இல்லை. அந்த அதிர்ச்சியான செய்தியிலிருந்து தங்கமணியின் வேகமான ஆராய்ச்சியினால் தப்பினாள் வள்ளிநாயகி. ஒவ்வொரு கோடை

விடுமுறையிலும் இவ்வாறு புதிய ஆராய்ச்சியிலும் துப்புக் கண்டு பிடித்தலிலும் ஈடுபட வேண்டு மென்று பேராசிரியர் வடிவேலு அவர்களை மனதார வாழ்த்தினர்.

ஜின்கா கடைசி முறையாக ஜங்ஜங்கென்று குதித்துவிட்டு, சப்இன்ஸ்பெக்டருக்கு ஒரு சலாம் செய்துவிட்டுச் சென்னையை நோக்கிப் புறப்பட்டது.

“யாரை மறந்தாலும் உன்னை மறக்கவே முடியாது” என்று ஜின்கா முதுகில் சிரித்துக் கொண்டே தட்டிக் கொடுத்தார் சப்இன்ஸ்பெக்டர்.

★